அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தில் தொழில் நுட்பமல்லாத சார்நிலைப்பணி விதிகளில் உள்ள தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளுக்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கும் முறை தொடர்பான விதிகளில் திருத்தம் ஒன்றும் செய்வது குறித்த வீட்டுவசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 22—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற 1834 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

27. சென்னை வட்டாரத்திலுள்ள சர்ச்சஸ் ஆக்சிலரி பார் சோசியல் ஆக்ஷனுக்கு புயல் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகள் தொடர்பாக விற்பனை செய்யப்படுகிற கட்டுமானப்பொருள்கள் மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 28—3—1980 ஆம் [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தேதியிடப்பெற்ற 278 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

28. கோயம்புத்தூர் மாவட்டம் போத்தனூரில் உள்ள பார்வையற்ற முதியோர் மறுவாழ்வு இல்லத்தில் தங்கி உள்ளவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 10—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 210 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*1. தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை விவரம் (வரவு-செலவுத் திட்டம் 1980-81 (ஆங்கிலம், தமிழ்).

*2. 1980-81 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (ஆங்கிலம், தமிழ்).

1980 ஜுலை 4]

*3. 1980-81 ஆம் ஆண்டுத் திட்டம் நிதிநிலைக் குறிப்பு திட்ட இணைப்பு, 1980-81 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு (ஆங்கிலம், தமிழ்).

*4.(நிதிநிலைக் குறிப்பு 1980-81. (1980 ஜுலைத் திங்களில் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபடி) (ஆங்கிலம், தமிழ்).

*5. 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள் (1980 ஜுலைத் திங்களில் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபடி) (ஆங்கிலம், தமிழ்).

*6. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் 1980-81 (ஆங்கிலம், தமிழ்).

** தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை (ஆங்கிலம், தமிழ்).

**8. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (ஆங்கிலம், தமிழ்).

1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் தேதி வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை (ஆங்கிலம்).

@ 10. 1979 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் தேதி முதல் 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் தேதிவரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி தொகுப்புரை (ஆங்கிலம்).

@@11. 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980).

---

* 2—7—1980 அன்று பேரவையின் முன் வைக்கப்பெற்றன.

** 2—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அவையில் வழங்கப் பெற்றன.

@27—6—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

@@ 1—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.